Arimā Nōkku

# அரிமா நோக்கு

4:3 அக்டோபர் 2010

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
4:3 அக்டோபர் 2010

## உள்ளே

சோழர்காலச் சுவரோவியங்கள்
- வ. ஜெயதேவன் 03

Apology
- Plato 05

சங்க இலக்கியத்தில் திணையும் பெண் அடையாளமும்
- அரங்க. மல்லிகா 16

சிங்கப்பூர். மலேசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு (வரலாற்றுப் பின்புலத்துடன்)
- இரத்தின வேங்கடேசன் 19

புலம்பெயர்ந்த தமிழரும் மலேசியத் தமிழும்: ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம்
- சாம் மோகன் லால் 25

தென்கிழக்காசியாவில் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு (கி.பி. 1500க்கு முன்னர்)
- ச. சிங்காரவேலு 33

ஈழத் தமிழரின் புலம்பெயர் இலக்கியத்தின் எதிர்காலம்
- நா. சுப்பிரமணியம் 42

Typology of the uḷḷuṟai and the iṟaicci in caṅkam poetry
- Thomas Lehman 48

சீனத்துப் பூக்கள்: பறக்கும் பருந்துகள்
- இலையூர் கிழார் 54

வினா-விடை
- சோ.ந. கந்தசாமி 55

Relative Participles in Eight Anthologies of Tamil
- S. Saravanan 61

கிரிஸ்ட்பெல் பங்க்ரஸ்ட் 68
- இரா. பிரேமா

மற்றும்

நூல். ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள். துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## சிற்றிதழ்களும் குறும்படங்களும்

பொதுவாக இதழ் உலகத்தில் வணிக நோக்கு நுழைந்தபின் ஏற்பட்ட நிலைமைக்கும் அதற்கு முந்தைய நிலைக்கும் வேறுபாடுகள் உண்டு. வணிக நோக்கு மட்டுமே முதன்மை பெற்றுத் தயாரிக்கப்படும் நிலை உருவான பிறகு, இதழ்களுக்கு என மக்கட்சமூகம் கணித்து வைத்த நியதிகளும் நியமங்களும் கைவிடப்பட்டன. உண்மையான சமூக விழுமியங்கள் சார்ந்த எழுத்துக்கள் புறந்தள்ளப்பட்டு, நுகர்வியல், விளம்பர வருவாய்த் தளங்களில் பயன்தரத்தக்க எழுத்துகளும், அமைப்புகளும் தலைதூக்கின. நடுவுநிலைமைப் பண்போடு, அறிவு, கலை ஒழுக்கங்களின் அரவணைப்பில் இயங்காமலும். மக்கள் வாழ்வியல் நல நாட்டம் பேணாமலும்-இதழ்கள் மலினமான சந்தைச் சரக்குகள் ஆயின.

இந்நிலையில்தான், கொள்கை-கோட்பாடுகளின் வழியில் எழுத்தை ஒரு வேள்வியாக நடத்தத் தாகமும் வேகமும் கொண்டவர்கள் சிற்றிதழ்களை வெளியிடத் தொடங்கினர். இவர்களுக்குள் குழுக்கள், குறுங்குழுக்கள், வாதங்கள், முரண்பாடுகள், மோதல்கள் என எத்தனையோ இருப்பினும், வருமானம் கருதிய வர்த்தக நோக்கம் இருந்ததில்லை. வர்த்தக வெளியீடுகள் செய்பவர் மீது இவர்கள் கொண்ட வெறுப்பும் வெகுளியும்-இவர்களை, அவ்வெளியீடுகளிலிருந்து மட்டும் பிரித்துவைக்கவில்லை; வெகுமக்களிடமிருந்தும் பிரித்துவைத்தன. -வெகுமக்கள் தம் இதழ்கள் பக்கம் நெருங்காமையே கூட, தமது வெற்றியாக இவர்கள் கருதினர். அவ்வெகுமக்களை விலக்கி வைப்பதற்கென்று கருதியோ என்னவோ தமக்கு மட்டுமே சிற்சில வேளைகளில் தமக்குள்ளும் சிலருக்குமட்டுமே புரியக்கூடிய ஓர் எழுத்து நடையையும் உருவாக்கிக் கொண்டனர். சிலர் தமிழில் ஒரு புதுமொழியையே தாம் படைக்கப்போவதாகவும் அறிவிப்புச் செய்தனர்.

கால ஓட்டத்தில் இவர்களில் பலர் வெகுமக்கள் படிக்கும் இதழ்கள் பக்கமாக நெருங்க நேர்ந்தபோது-இணக்கம் புரிந்துகொண்டு தம் எழுத்துப் போக்குகளையே மாற்றிக்கொண்டனர். அவர்களைக்கேட்டால், வெகுமக்கள் ஏடுகள் தம் படைப்புப்போக்கைப் புரிந்து ஏற்றுக்கொண்டதாகவும்-சிற்றிதழின் வெற்றியை வெகுமக்கள் ஏட்டில் தாம் நிறுவிவிட்டதாகவும் சொல்லி வேதியியல் மாற்ற நூற்பாக்களை யாத்துக் கொடுப்பர்.

எது எப்படி இருப்பினும், புதுத் தளங்கள், புது முயற்சிகள், பார்வைகள் படைப்பு உத்திகள் என்று சிற்றிதழ்களின் பரிமாணங்கள், தமிழ்மொழி முற்றத்தில் உயிரோட்டமுள்ள இயங்கியல் கூறுகளைப் பதிவுசெய்ததை எவரும் மறுக்க முடியாது. புதுப் படைப்பாளிகளை அடையாளம் கண்டு வளர்த்தெடுத்த பெருமையும் சிற்றிதழ்களுக்கு உண்டு.

சிற்றிதழ்கள் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றோடு அதிக அளவிலான ஒற்றுமைத் தன்மைகளோடு இனம் காணத் தக்கதாக இருப்பது குறும்பட உலகம். படைப்பாற்றல் உள்ளவர்கள். மரபிலிருந்து விலகிச்செய்யும் முயற்சிகளுக்குக் களமாக இருக்கும் இது வரவேற்கத் தக்க ஆக்கபூர்வமான குறும்படங்களை அவ்வப்போது வெளியிட்டுவருகிறது. பெரும் முதலீட்டு ஏகபோகம், அதன் கையில் இருக்கும் தொழில்நுட்பப் பெருக்கம் ஆகியவற்றை நெருங்கமுடியாத அல்லது விரும்பாத சூழ்நிலையில், படைப்பு ஆளுமை ஒன்றையே முதலீடாகக் கருதி இளைஞர்கள் குறும்பட உலகிலிருந்து போராடி

வருகின்றனர். இவர்களுக்குப் பெரும் திரையரங்குகள் தேவையில்லை; வகைவகையான வாணிக உத்திகளோடு கூடிய விளம்பரங்கள் அதிகார-முதலாளிய மையங்களின் ஆதரவுப்பின்னணி-ஏதும் தேவைப் படுவதில்லை. சின்னதிரைகள், சிற்றரங்குகள் போதுமானவை. இக்குறும்படங்கள் மீது, நிகழ்த்தப்படும் விமர்சனங்களில் பெரும்பாலும் நேர்மையும் அறிவார்ந்த அணுகுமுறையும் கடைப்பிடிக்கப்படுகின்றன. எனினும், இங்கும் குறும்பட முயற்சிகளைப் படிக்கட்டுகளாகப் பயன்படுத்திக்கொண்டு வணிக நோக்கிலான படங்களுக்கு வாய்ப்பு வரும்போது, தாம் கற்ற, பின்பற்றிய கலைப்படைப்பு நியமங்களைக் கைவிட்டு விட்டுத் தாவும் மனப்போக்கு இல்லாமல் இல்லை. ஒன்றை இங்குச் சொல்லலாம். குறும்படங்களில் தோல்வி ஏற்பட்டால் அது படைப்புத்திறன் தோல்வியாகிறது. பெரும்படங்களில் தோல்வி ஏற்பட்டால் அது வாணிகத் தோல்வியாகிறது.

சிற்றிதழ்களின் வலுவான விழுமிய தாக்கம் வெகுமக்கள் ஏடுகளிலும், குறும்படங்களின் அத்தகைய தாக்கம் வர்த்தகத் தயாரிப்புப் படங்களிலும் ஏற்பட வேண்டும் என்பதற்கான போராட்டமும் முயற்சியும் மட்டுமே எழுத்துலகிலும், கலை உலகிலும் படைப்பாளிகளின் இருத்தலுக்கும் இயங்கலுக்குமான நியாயத்தை ஏற்படுத்தும். ♦


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்



# கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/— | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/— | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/— | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/— | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 15, 000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 10, 000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 3, 000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 1, 500 |

***தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.***



அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www.arimaanokku.com

மின் அஞ்சல்: arimaa.nokku@gmail.com

செல்: 9380626448